ARCHUNA

# அர்ச்சுனா

சிறுவர்களுக்கான மாத இதழ்

50 ரூபா

கல்வி முயற்சி பெருவாழ்வு

செப்ரெம்பர் 2011




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UTHAYAN IT ISLAND

# GATEWAY CENTRE

FAST TRACK
TRAINING PROGRAMME

## We inspired We GATEWAY



- ICDL
- E - Citizen
- Advance ICDL Packages
- ASAP
- English for Life
- Diploma in Microsoft Office
- Diploma in Destop Publishing
- Diploma in Multimedia Graphic
- Diploma in Accounting Package
- Diploma in Hardware & Networking

**CONTACT**

- Luxmee Theatre Lane, Nelliyady.
  021 226 2395
- 1st Floor, New Market Buildind,
  Chavakacheri. 021 227 0323
- 347, Kasthuriyar Road,Jaffna.
  021 567 5555 / 021 222 7967

GATEWAY Language Centre · GATEWAY KIDS · IPICT · ICDL · e-Citizen · e-TYPE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ARCHUNA

அன்புக்குரிய எங்கள் செல்வங்களே!

## வாசியுங்கள் எழுதுங்கள்

ஆளும் வளரனும் அறிவும் வளரனும் அது தாண்டா வளர்ச்சி என்கிறது ஒரு சினிமாப் பாடல் அதிலே நிறைந்துள்ள உண்மையைப் புரிந்து கொள்ளுங்கள். நல்ல கல்வியும் உடலா ரோக்கியமும் உங்கள் வளர்ச்சிக்கு அவசிய மாகும். நிறையவே கற்றுக் கொள்ளுங்கள் நிறை யுணவைப் பெற்று பயிற்சி செய்து ஆரோக்கி யமாக வளருங்கள். எல்லா வளங்களும் உங் களை வந்தடைய அர்ச்சுனா என்றும் உங்களை வழிப்படுத்துவான் நிறைய வாசியுங்கள் நிறைவா கக் கற்றுக் கொள்ளுங்கள். ஓய்வு நேத்தைப் பயனுடையதாக்குங்கள். உங்களின் தூய்மை யான சிந்தனையும் செயல்களும் வளர இன்றே உங்களைத் தயார்ப்படுத்துங்கள்.

ஆசிரியர்

## பள்ளிக்கூடம் போகலாமே

பள்ளிக்கூடம் போகலாமே
சின்ன பாப்பா - நிறைய
பிள்ளைகளோட பழகலாமே
சின்ன பாப்பா

ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்
சின்ன பாப்பா - கல்வித்
தோட்டம் அந்த பள்ளிக் கூடம்
சின்ன பாப்பா

பள்ளிக் கூடம் திறந்தாச்சே
சின்ன பாப்பா - உனக்கு
நல்ல நேரம் பிறந்தாச்சே
சின்ன பாப்பா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டத்தில் கடிகாரம்.

லப்பாம் டப்பாம் இருவரும் ஊர் மக்களின் பாராட்டுக்களினால் திணறிப் போனார்கள். அவர்களுக்கு எல்லாமே ஆச்சரியமாக இருந்தன. அவர்களுக்கோ ஒன்றும் புரியவில்லை. "துப்பறியிற தெண்டா என்னடா" என்று டப்பாம் கேட்டான். "அதுதான் எனக்கும் தெரியலை" "என்றபடி கடலையைக் கொறித்தான் லப்பாம்.

பள்ளிக்கூடத்தில் இவர்களின் சாகசம் பரபரப்பாகப் பேசப்பட்டது. மாணவர்களும் இவர்களைப் பாராட்டினர். இப்படிப் பலரது பாரட்டுக்களையும் பெற்று மகிழ்ச்சியுடன் இருக்கும்போது ஒரு விபரீதம் பள்ளிக் கூடத்தில் நடந்தது.

அன்று காலை பள்ளிக்கூடம் ஆரம்பிப்பதற்கு மணி அடிப்பதற்காக தலைமை வாத்தியார் நேரத்தைப் பார்த்தார். அவருக்குத் தலை சுற்றியது. மேசையில் கடிகாரத்தைக் காணவில்லை. திகைத்துப்போன அவர் பதட்டத்துடன் எல்லா இடமும் பார்த்தார். காணவில்லை.

பியோன் கந்தசாமியைக் கூப்பிட்டார். இருவருமாகத் தேடிப் பார்த்தனர். ஒரு இடத்திலும் காணவில்லை. இதற்கிடையில் கடிகாரம் களவு போன செய்தி பலருக்கும் தெரிய வந்துவிட்டது. ஆசிரியர்கள் அறையில் கூடினர். எல்லோரும் சேர்ந்து தேடினார்கள். ஒரு இடத்திலும் அகப்படவில்லை. "ஓட்டைப் பிரித்து யாரோ எடுத்து விட்டார்கள்" என்றான் கந்தசாமி. எல்லோரும் ஓட்டைப் பார்த்தனர் ஓடு பிரிக்கப்பட்டதற்கான அடையாளம் இல்லை.




அந்த நேரம் கணக்கு வாத்தியார் அங்கு வந்தார். "இது களவு, லப்பாம் டப்பாம் தான் துப்புத்துலக்கிக் கள்வனைக் கண்டு பிடிப்பார்கள்" என்றார்.

அப்பொழுதுதான் தலைமைவாத்தியாருக்கும் மற்றவர்களுக்கும் லப்பாம் டப்பாம் கடத்தல்காரர்களைப் பிடித்த விடயம் நினைவுக்கு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர். வில்வம் பசுபதி



இருவரையும் கூட்டி வரும்படி தலைமைவாத்தியார் பியோன் கந்தசாமியை அனுப்பினார்.

வகுப்பில் கடலை கொறித்துக் கொண்டிருந்த இருவரும் பியோன் கந்தசாமி வகுப்பினுள் நுழைந்ததைக் காணவில்லை.

கந்தசாமி இருவரையும் ஏதோ பிராணிகளைப் பார்ப்பது போல் பார்த்தான். இந்த முட்டாள்களா களவைக் கண்டு பிடிக்கப் போகிறார்கள். 'தலைமை வாத்தியார் அரைக்கிறுக்கு இதுகள் முழுக்கிறுக்குகள்' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். பின்பு இருவரையும் நோக்கி "டேய் பெடியள்களா தலைமைவாத்தியார் உடன் வரட்டாம்" என்று சொன்னான்.

லப்பாம் டம்பாமிற்குத் தலையைச் சுற்றியது "கையில் பிரம்பு வைத்திருக்கிறாரா?" என்று அப்பாவித்தனமாக லப்பாம் கேட்டான்.

"தும்புக்கட்டு வைத்திருக்கிறார் வாங்கடா கெதியா" என்று சத்தம் போட்டுச் சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

லப்பாம், டப்பாம் இருவரும் வகுப்பறையை விட்டு வெளியே வந்தனர் நாங்கள் கடலை திங்கிறதைக் கணக்கு வாத்தி சொல்லிப் போட்டுது போல அது தான் தலைமைவாத்தி அடிக்கப்போகுது" என்றான் . லப்பாம், டப்பாமுக்கு உதறல் எடுத்தது. கேற்றடியைப் பார்த்தான் பின்பு "வீட்டை ஓடுவமடா" என்றான்.

தலைமைவாத்தியாரின் அறை வாசலில் நின்ற கந்தசாமி இவர்களைப் பார்த்தான் "கெதியா வாங்கடா!" என்று சத்தம் போடவே வேறு வழியின்றித் தயங்கித் தயங்கிப் போனார்கள்.

இவர்களைக் கண்டதும் தலைமை வாத்தியாரின் முகம் மலர்ந்தது. ரேபிள் குளக் களவு போட்டுது கள்வனைக் கண்டு பிடிக்க முடியுமா? என்று அன்பாகக் கேட்டார்.

"ரேபிள் குளக்" என்று தலைமை வாத்தியார் சொன்னது அவர்களுக்குப் புரியவில்லை. திரு திருவென இருவரும் முழித்தனர்.

"என்ன யோசிக்கிறியள் கண்டு பிடிப்பியளா" என்று அழுத்திக் கேட்டார். பயத்தினால் இருவரும் தலையை ஆட்டினார்கள். பின்பு சத்தம் போடாமல் வெளியேறினார்கள் அடி விழவில்லை என்ற மகிழ்ச்சியில் சட்டைப் பையில் இருந்த கடலையை எடுத்துத் தின்றார்கள்.

"ரேபிள் குளக்கெண்டா என்னடா" என்றான் லப்பாம் "எனக்குத் தெரியாது இனிப் பள்ளிக்கு வராமவிடுவம்" என்றான் டப்பாம்.

அன்று பள்ளிக்கூடம் விட்டு வீட்டுக்குப் போகும் போது எதிர்பாராத வகையில் பூனைக்குட்டிச் சாத்திரியாரைக் கண்டார்கள்.

பூனைக்குட்டிச் சாத்திரியார் என்றால் இருவருக்குமேபயம் அவர் தூரத்தில் வரும்போதே கண்டு விட்டார்கள். என்ன செய்வது எங்கே போவது எங்கே ஓடி மறைவது என்று திகைத்தவர்களுக்கு எதிரே ஒழுங்கை ஓரத்தில் இருந்த மரவள்ளித் தோட்டம் கண்களுக்குத் தென்பட்டது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உடனே வேலியில் இருந்த இடைவெளிக்கூடாக ஓடிப்போய் மரவள்ளித் தோட்டத்துக்குள் படுத்துவிட்டார்கள்.

மரவள்ளித் தோட்டத்திற்கு அன்று காலை நீர் இறைக்கப்பட்டு நிலம் ஈரமாக இருந்தது. அதைப் பொருட்படுத்தாது மரவள்ளிப்பாத்தியில் குப்புறப் படுத்தார்கள்.

சிறிது நேரத்தில் லப்பாம் தனது வழமையான குறும்புச் சேட்டையில் இறங்கிவிட்டான். மரவள்ளிப்பாத்தியைக் கையால் கிளறத் தொடங்கினான். எதிர்பாராதவிதமாக அவன் கைக்கு கிழங்கு தட்டுப்பட்டது. அவன் இன்னும் ஆழமாகத் தோண்டிக் கிழங்கை முறித்து எடுத்துத் தின்னத் தொடங்கினான்.

லம்பாம் கிழங்கு சாப்பிடுவதைப் பார்த்த டப்பாம் சும்மா இருப்பானா? உடனே அவனும் தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கினான்.

டப்பாமின் கைக்குக் கிழங்குக்குப் பதில் விநோதமான ஒரு பொருள் தட்டுப்பட்டது. மேசைக் கடிகாரம் பொலித்தீன் பையினால் சுற்றப்பட்டுப் புதைக்கப்பட் டிருந்தது. அதை எடுத்துப் பார்த்த டப்பாமிற்கு அது என்ன பொருள் என்று தெரியவில்லை. "என்னடா இது ?" என்று லப்பாமைக் கேட்டான். அந்த நேரத்தில் தோட்டத்தில் ஏதோ பேச்சுக்குரல் கேட்கிறதே என்று எண்ணியவாறு வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்தான் பியோன் கந்தசாமி அது அவனுடைய தோட்டம். வீட்டோடு சேர்ந்து தோட்டம் இருந்தது.

அவன் கண்ட காட்சி அவனுக்கு மூச்சே நின்றுவிடும் போல் இருந்தது. தான் புதைத்து வைத்த கடிகாரத்தை இவர்கள் எப்படி மோப்பம் போட்டுக் கண்டு பிடித்தார்கள் என்று வியந்தவனாக "தம்பி தம்பி கொஞ்சம் நில்லுங்கோ" என்று கெஞ்சியபடி அவர்களை நோக்கிப் போனான்.

இருவருக்கும் பயம் நெஞ்சைக் கவ்வியது. "பியோன் அடிக்கப் போறாண்டா" என்று சொன்ன டப்பாம் கடிகாரத்துடன் ஓட்டம் எடுத்தான் அவனைத் தொடர்ந்து லப்பாம் ஓடினான். கந்தசாமி கெஞ்சினான். மன்றாடியபடி பின்னுக்கு அவர்களைத் தொடர்ந்து ஓடும்போது "என்னைக் காப்பாத்துங்கோ" என்று கெஞ்சினான்.



லப்பாம் டம்பாமிற்குத் தலையைச் சுற்றியது கையில் பிரம்பு வைத்திருக்கிறாரா? என்று அப்பாவித்தனமாக லப்பாம் கேட்டான்.

கந்தசாமி தங்களைத் துரத்துவதாக எண்ணி அவர்கள் இன்னும் விரைவாக மூச்சு வாங்க ஓடினார்கள்.

இவர்கள் ஓடிய வேகத்தில் அப்போதுதான் பாடசாலை யில் இருந்து வந்த தலைமை வாத்தியாரைக் கவனிக்கவில்லை. அவரோடு மோதிய பின்பு தான் அவரைக் கவனித்தார்கள்.

தலைமைவாத்தியார் இவர்கள் பாடசாலை மேசைக் கடிகாரத்தை கையில் வைத்திருப்பதையும் கந்தசாமி ஓடி வருவதையும் கண்டு திகைத்தார். கந்தசாமி ஓடிவந்து தலைமைவாத்தியாரின் காலில் சாஸ்டாங்கமாக விழுந்தான் "ஐயா தெரியாத்தனமா திருடிட்டேன் என்னை மன்னியுங்கோ" என்று அழுதான். அவர் பார்வை கடிகாரத்தின் மீதும் லப்பாம் டப்பாம் மீதும் சென்றது. ஒரு சில மணித்தியாலங்களுக்குள்ளேயே இவர்கள் துப்புத் துலகி விட்டார்களே என்று வியந்து அவர்களை அன்புடன் ஆரத்தழுவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ச்சுனா தரும் சொற்கோலம்



### திறனாய்வு இலக்கம் 4

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | 4 | | |
| | | | | | | | 5 |
| | 6 | | | | | | |
| 7 | | | | | 8 | | |
| | 9 | 10 | | | | | |
| 11 | | | | 12 | | | |
| | | | | 13 | 14 | | |
| | | 15 | | | 16 | | |

**இடமிருந்து வலமாக**

1. யானை
2. இரத்த நிறம்
5. இடைச்சி
6. கப்பல்
7. இது சிறிது காரம் பெரிது
8. திருத்தம்
9. ரவையில் செய்தது
10. வீரமாமுனிவர் இயற்றியது
13. நேரம்
14. இந்திய அகிம்சை மகான்
16. பொன் மணல்



**மேலிருந்து கீழாக**

1. பொன்
2. இவர் ஒரு சக்கரவர்த்தி
3. உபாயம் தேடும்
4. பூமி
5. இடைச்சேரி
10. கோவிற் பூங்கா
11. வகை தேடு
12. கணக்கு
13. நண்பகல் (இறுதி எழுத்தில்லை)
14. சந்திரன்
15. பொன்.

சொற்கோலம்
அர்ச்சுனா
361 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்


### திறனாய்வு இலக்கம் 3 இன் விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 நெ | 2 ரு | ப் | 3 பு | க் | 4 கோ | ழி | |
| | க் | | கை | | மா | | 5 வ |
| | 6 ம | ர | வ | ள் | ளி | | ன் |
| 7 ம | ணி | | ண் | | 8 க | ள | னி |
| | 9 தே | 10 வ | டி | | ள் | | யூ |
| 11 தீ | வி | ரி | | 12 ஆ | | | ரா |
| ப | | | | 13 தி | 14 ரு | ட | ன் |
| ம் | | 15 கா | சு | | 16 து | தி | |

செப்ரெம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகக் கூப்பனைப் பூர்த்தி செய்து சொற்கோலம் 4, அர்ச்சுனா, 361 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சரியான விடையெழுதிய அதிஸ்டசாலிகள் மூவருக்கு முறையே 250/=, 150/=, 100/= ரூபாய் பணப்பரிசுகள் வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பயங்கரமான பிரயாணம்

மனித காலடி படாத - காலடி பட முடியாத வட தென் முனைவு பிரதேசங்களுக்குச் சென்று அங்குள்ள சூழ்நிலையை ஆரய்ந்து திரும்ப வேண்டும், என்ற முயற்சியில் மனிதர்கள் நெடுங்காலமாகவே ஈடுபட்டு வந்திருக்கின்றனர்.

வட தென் முனைவுப் பகுதிகளுக்குச் செல்வோர் உயிரோடு திரும்புவதற்கு வாய்ப்பே இல்லை என்ற உண்மைதெரிந்தும், அந்த முயற்சியில் தீரத்துடன் இறங்கி தங்கள் உயிரையே பறி கொடுத்து, பெருந்தியாகம் புரிந்தனர் காப்டன் ஸ்காட் என்பவரும் அவருடைய குழுவினரும்.

அவர்கள் தென் துருவத்தை நோக்கிச் சென்ற பயங்கர அனுபவப் பயணம் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாக ஆகிவிட்டது.

தென் துருவத்தில் நிலவும் கோரக்குளிர் - அங்கே வீசும் பயங்கரப் பனிப்புயல் ஆகிய வற்றைப் பற்றியெல்லாம் காப்டன் ஸ்காட் கேள்விப்பட்டே இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் துருவப் பகுதிக்குப் பிரயாணம் செய்வது ஓரளவுக்குத் தற்கொலை முயற்சி போன்றதே என்பதை அவர்கள் உணர்ந்தே இருந்தனர். என்றாலும் அங்கு சென்று அங்குள்ள சூழ்நிலையை உயிர்வாழ் பிராணிகளின் வாழ்க்கையை உலகத்தில் ஸ்காட் ஒரு சிறிதும் தளர்ச்சியுறவே இல்லை.

ஸ்காட்டும்அவருடைய நண்பர்களும் **1912**ம் ஆண்டில் தென் துருவத்தை நோக்கிக் கடினமான பயணத்தைத் தொங்கினார்கள்.

எவ்வளவு தூரம் கப்பலில் செல்ல முடியுமோ அந்த தூரம் வரை ஸ்காட் தமது குழுவினருடன் கப்பலில் சென்றார்.

மேற்கொண்டு கப்பல் செல்ல முடியாது என்ற கட்டத்தை அடைந்ததும் கப்பலை ஓரிடத்தில் பத்திரமாக நிறுத்திவிட்டு அதற்கு மேல் நடந்தே தென் துருவ எல்லையை நோக்கிப் பயணம் செய்ய முற்பட்டனர்.

தென்துருவத்தை அடைவதற்குப் பதிநான்கு மைல்கள் நடக்க வேண்டியிருந்தது. அந்த பதிநான்கு மைல்களும், பனிக்கட்டிப் பாறைகள் மீதுதான் நடந்து செல்ல வேண்டும்

அவசியமான உணவுப்பண்டங்கள், உடை, அளவுக் கருவிகள் போன்றவற்றை ஸ்லெட்ஜ் வண்டியிலேற்றி அந்த வண்டியை இழுத்துக் கொண்டு உறை பனியிலும், கடும் குளிரிலும் காப்டன் ஸ்காட்டும், அவர் குழுவினரும் நடந்தனர்.

செல்ல இயலாத சிரமத்தைச் சகித்துக் கொண்டு விடா முயற்சியுடன் பயணம் செய்து **1912**ம் ஆண்டு ஜனவரி மாதம் **18**ந் தேதி தென் துருவத்தை அடைந்து தங்கள் இலட்சியத்தில் வெற்றி கண்டனர்.

தென்துருவத்தை அடைந்த போது அவர்கள் உடலும் மனமும் அளவுக்கு அதிகமாகச் சோர்ந்திருந்தன.

திரும்பி கப்பல் இருக்கும் இடத்தை நோக்கி நடந்து செல்வது அவர்களுக்குச் சகிக்க இயலாத வேதனை தரக்கூடிய அனுபவமாக இருந்தது.

ஸ்காட்டின் கூட்டாளிகளில் ஒருவர் தென் துருவ எல்லையை விட்டுப் புறப்பட்டுக் கொஞ்சத் தூரம் வந்த உடனேயே இறந்து போய் விட்டார்.

ஸ்காட்டும் மற்றவர்களும் கடுங் குளிரைத் தாங்கிக் கொண்டு நடை போட்டனர்.

பனிக்கட்டியில் நடக்கும் போது கால்கள் முழுவதும் விறைத்து அடியெடுத்து வைப்பது சிரமமாக இருந்தது.

இவ்வளவு சிரமத்துக்கு இடையே தாங்கள் வந்த நோக்கத்தையும் ஸ்காட் மறந்து விடவில்லை.

துருவப் பிரதேசத்தில் வசித்த சில பிராணிகளையும், அங்கே காணப்பட்ட சில தாவர வகைகளையும் சேகரித்துத் தம்முடன் எடுத்துக் கொண்டார்.

தாங்க இயலாத குளிர் காரணமாக ஸ்காட்டின் நண்பர் ஒருவருடைய கைவிரல்கள் முற்றிலுமாக அழுகி விட்டன. அவர் கால்களும் பெரும் பாதிப்புக்கு இலக்காகி விட்டன.

தொடர்ந்து நடந்து வரும் போது பாதிப்புக்கு உள்ளான நண்பரும் உயிரிழந்து விட்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடைசியாக காப்டன் ஸ்காட்டும் இரண்டு தோழர்களும் மட்டுமேமிஞ்சினர்.

வழியில் உறைபனிப் புயல் வீசத் தொடங்கியது. குளிரின் கொடுமையை சகிக்க இயலவில்லை.

கையிலிருந்த உணவுப் பொருட்கள் தீர்ந்து விட்டன. சாப்பிட ஏதும் இல்லாத நிலையில் தொடர்ந்து நடந்து செல்ல முடியும் என்ற நம்பிக்கையை ஸ்காட் இழந்து விட்டார்.

அந்தப் பனிபடிவத்திலேயே தம்முடைய வாழ்க்கை முடிந்து விடப்போகிறது என்று ஸ்காட் உணர்ந்து கொண்டார்.

உடனே தமது குறிப்புப் புத்தகத்தை எடுத்து தென்துருவப் பயணம் தொடர்பாக தமக்கு ஏற்பட்ட அனுபவங்கள் அங்கே தாம் கண்டவை உணர்ந்தவை ஆகியவை பற்றி விரிவாக எழுதி வைத்தார்.

கடைசியாக தமது நாட்குறிப்பில் ஆபத்துகளை எதிர்பார்த்துதான் நானும் சகதோழர்களும் தென்துருவப் பயணத்தை மேற்கொண்டோம். ஆகவே எங்களுக்கு ஏற்பட்ட துயர அனுபவங்களை நாங்கள் பெரிதாக எண்ணவில்லை. கடவுள் எந்த அளவுக்கு எங்களைப் பணிபுரிய அனுமதித்தாரோ அதுவரை நாங்கள் பணியாற்றினோம். "எங்கள் இறுதி மூச்சு நிற்கும் வரை எங்கள் பணி நிற்கவில்லை" என ஸ்காட் எழுதி வைத்தார்.

ஸ்காட்டும் அவர் குழுவினரும் அமைத்த கூடாரத்தில் சாய்ந்தவாறே ஸ்காட் நிம்மதியுடன் உயிரை விட்டார்.

அடுத்து அவருடைய சாகக்களின் உயிரும் பிரிந்தது.

பின்னாளில் தென்துருவ யாத்திரையை மேற்கொண்டு வெற்றிக் கொடி நாட்டியவர்கள் உறைந்த பனிக்கட்டிகளின் அடியில் இருந்து ஸ்காட்டின் நினைவுக் குறிப்புப் புத்தகத்தை தோண்டி எடுத்தனர்.



**ஔவையார் அருளிய ஆத்திசூடி**

# அறம் செய்ய விரும்பு



அறம் என்றால் தருமம் என்பது பொருள். தருமம் என்பது என்ன? பிறருக்கு உதவி செய்வது, அவர்களுடைய துன்பங்களை அகற்றுவதற்கான நல்ல செயல்களில் ஈடுபடுவதே தருமம் ஆகும். என்ன செயல்கள்? எத்தகையவர்களுக்கு? ஏழை எளியவர்களின் பசியாற, அவர்களுக்கு உணவளிப்பதே தலை சிறந்த தருமம் ஆகும். உடுக்க ஆடை கொடுப்பதும் தருமம், இப்படித்தருமம் செய்வாயானால் ஏழைகளின் துன்பம் நீங்கும். அவர்களுடைய முகத்தில் மகிழ்ச்சி மலரும். உன் உள்ளத்திலும் இன்பம் பொங்கும். இந்த மகிழ்ச்சியையும் "இன்பத்தையும்" நீ அடைய வேண்டாமா? ஆகவே துன்பப்படுபவர்களுக்கு ஏழை எளிய மக்களுக்கு உழைத்து வாழ இயலாத உடல் ஊனமுற்றவர்களுக்கு உன்னால் இயன்ற அளவு அறம் செய்ய ஆசைப்படு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ம.வாகீஸ்

# கஞ்சன் ஜிங்ஜு

வசதி படைத்தவன் ஆயினும் ஜிங்ஜு மகா கஞ்சன். தானம் கேட்டால் ஒருசதம் கூடத கொடுக்கமாட்டான்.

ஒருநாள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த ஜிங்ஜு தனது செல்வம் எல்லாவற்றையும் யாரோ திருடிக் கொண்டு போவது போலக் கனவு கண்டான். அலறி அடித்துக் கொண்டே விழித்தெழுந்தான். அதன் பின்னர் அவனுக்குத் தூக்கமேவரவில்லை. இரண்டு நாள்களாக அவனால் திருப்தியாகச் சாப்பிடவும் இயலவில்லை. தனது நண்பர்கள் மீதும் அவனுக்குச் சந்தேகம் தோன்றியது. எவரையும் அவனால் நம்பமுடியவில்லை. மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பதுபோல் எதற்கும் பயந்தான்.


கடைசியில் புத்திசாலியும் நல்ல உள்ளம் கொண்டவருமான ஜென் என்ற பெரியவரைப் போய்ச் சந்தித்தான். தனது பிரச்சினையை அவரிடம் எடுத்துச் சொல்லித் தீர்வு கேட்டான். தனது செல்வத்தைப் பாதுகாக்கும் வழியைச் சொல்லுமாறு வேண்டினான். அவரோ சிறிது நேர மௌனத்தின் பின்னர் உன் பணத்தை எல்லாம் மூடையாகக் கட்டிக் கொண்டு போய் நான் குறிக்கும் மரத்தின் அடியிலே புதைத்துவிடு அது பாதுகாப்பாக இருக்கிறதா என்பதை அடிக்கடி அங்கே சென்று பார்த்துக்கொள் என்று கூறினார். அதன்படி மரத்தின் அடியிலே புதைத்த பண மூடையை ஜிங்ஜு இரண்டு நாள்களுக்கு ஒருமுறை சென்று பார்த்துச் சந்தோசப்பட்டான். இதை அவதானித்த திருடன் ஒருவன் ஜிங்ஜு வராத வேளையில் அவனது பணமூடையை வாரிச் சுருட்டிக் கொண்டு தப்பிச் சென்று விட்டான்.


இரண்டு நாள்களின் பின்னர் அங்கே வந்து பணமூடையைத் தேடிய ஜிங்ஜு வுக்குத் தலைசுற்றியது. தனது பணத்தைத் தொலைத்தமைக்குப் பெரியவரான ஜென் தான் காரணம் என எண்ணியவன் அவரை அணுகி ஆவேசத்துடன் ஏசிக் கத்தினான். ஆனால் அவரோ மிகவும் அமைதியாக ஜிங்ஜு வுக்கு ஒரு கோப்பை தண்ணீரை கொடுத்து அமைதியாக இரு என்றார் . அவனோ தண்ணீர்க் கோப்பையைத் தட்டிவிட்டு எனக்கு நீதி வேண்டும் என்றான். அதற்கு அவர் எதற்காக வருத்தப்படுகிறாய். நீ அப்பணத்தை மூடையில் கட்டிப் புதைத்துத்தானே வைத்திருந்தாய். உபயோகிக்க உதவாத பொருள் எதுவாக இருந்தாலும் அது இருந்தாலும் ஒன்றுதான் இல்லாவிட்டாலும் ஒன்றுதான். அதுபோல நீ அந்தப் பணத்தை ஒரு போதும் உபயோகிக்கப் போவதில்லை. எனவே நீ வைத்த இடத்தில் அப்பணம் இருப்பதாகவே நினைத்துக்கொள் என்றார்.

கஞ்சத்தனத்தால் தான் செய்த தவறை உணர்ந்து பதிலேதும் சொல்லாமல் ஜிங்ஜு திரும்பிச் சென்றான். தன்னிடம் எஞ்சி இருந்த செல்வமெல்லாவற்றையும் ஏழைகளுக்குத் தானம் செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மட்டக்களப்பு

மொத்த நிலப்பரப்பு -2854 சதுரக்கிலோ மீற்றர்
நிலப்பரப்பு -2610 சதுரக்கிலோ மீற்றர்
நீர் நிலைகள் -244 சதுரக்கிலோ மீற்றர்

## பிரதேச செயலாளர் பிரிவு 11

1) ஏறாவூர் பற்று6) கோறளைப்பற்று
2) பட்டிப்பளை7) கோறளைப்பற்று மேற்கு
3) போரை தீவுப்பற்று8) கோறளைப்பற்று மத்தி
4) களுவாஞ்சிக்குடி9) மண்முனை மேற்கு
5) காத்தான்குடி10) மண்முனை வடக்கு
11) மண்முனை பற்று

- சனத்தொகை - 549000.
  ஆண்கள் - 268000.
  பெண்கள் - 281000.
- 10 வயதுக்குள்ளானோர் 385409 முழு மாவட்டத்துக்குமான இன ரீதியான சனத்தொகைப் பரம்பல் புள்ளி விபரங்கள் இல்லை.

மண் முனைப்பற்று மொத்தச் சனத் தொகை 30284.
தமிழ் - 76%
முஸ்லீம்கள் - 24%

- காத்தான்குடி 40421 பேரில் பெரும்பான்மையினர் முஸ்லிம்கள். மண்முனைப் பிரிவில் 85557பேர் வசிக்கின்றனர். இவர்களுள் 90% ஆனவர்கள் தமிழர்கள். கோறளைப்பற்று பிரிவில் தமிழர்கள் பெரும்பான்மையினர்.

தொழிலானர் அணி 154670 (41.4%)
2004இல்
தொழிலாளர் அணி பங்கீடு


| | |
|---|---|
| விவசாயம் | 32.6% |
| கைத்தொழில் | 23.3% |
| சேவைகள் | 44.1% |

வறிய மக்கள் பற்றிய புள்ளி விபரம் இல்லை.




## வளங்களும் வாய்ப்புக்களும்.

நெற் செய்கையும் மீன்பிடியும் இம்மாவட்டத்தின் பிரதான பொருளாதாரச் செயற்பாடுகளாகும். நன்னீர் மீன்பிடித் தொழிலுக்காக அநேக குடும்பங்கள் பயன்படுத்தும் மட்டக்களப்பு வாவி இந்த மாவட்டத்தின் முக்கிய வளங்களில் ஒன்றாகும். இறால், நண்டு, கூனி, சிப்பி, ஆற்று மீன்கள் என்பவற்றின் வளர்ப்பிற்கு நிறைய வாய்ப்புக்கள் உள்ளன. கோறளைப்பற்று பிரிவில் பல நன்னீர் குளங்கள் உள்ளன. இவை விவசாயத்திற்கும் மீன் வளர்ப்பிற்கும் உதவும், செங்கல் உற்பத்தி ஆடை தயாரிப்பு, கல்லுடைத்தல், அச்சுத் தொழில், மேசன் வேலை, குடிசைக் கைத்தொழில்கள் என்பன; இப்பிரதேச மக்கள் ஈடுபட்டுள்ள ஏனைய தொழில் முயற்சிகளாகும். மாவட்டத்தின் கடற்கரையோரப் பிரதேசங்கள் சுற்றுலாத் தொழிலுக்குச் சிறந்த வாய்ப்புக்களைக் கொண்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

l ஆவது படத்திலிருந்து 2 ஆவது படம் ஐந்து விடயத்தில் வித்தியாசமாக உள்ளது. அவற்றினை கண்டுபிடியுங்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டறியாதது

## "சுடுநீர்ப் போத்தல்."

கந்தையா : குரோதியிலே கொடிய புயல் கும்மாளம் போட்டதன் பின்
மாரியிலே மழையற்று மாவிளைச்சல் அழிந்தபின்னர்
மார்கழியும் பிறக்கிறது மறுமலர்ச்சி துளிர்க்கிறது.
மகிழ்ச்சியுடன் மனித இனம் மாண்படைய முனைகிறது.

வடிவேலு : கவிபாடும் கந்தையா கனகோடி வணக்கங்கள்
புதிதாக வாங்கிய வெந்நீர்க்குடுவை எப்படியோ?

கந்தையா : சில காசு போனாலும் அசற்சாமான் அடடா
தடுதாலிப் படவேண்டா, அதிகாலை சுடுகோப்பி
குடிநீயும் இதனுடைய தாற்பாரிய தத்துவத்தை
விரிவாக விளக்காது விழலா நீ கதைக்கின்றாய்.

வடிவேலு : தரமான கோப்பிதான், அது போக இதை நீ கேள்
திரவமாக்கியவாயு தேக்கிவைத்திடவென்று
"ஜேம்ஸ் டீவார்" என்பவரின் திறமையால் தோன்றியது.
வெந்நீர்க் குடுவையெனும் வெற்றிடக் குப்பியிது.

கந்தையா : உள்ளுக்கிருப்பவற்றை ஒவ்வொன்றாய் உரையேன் நீ

வடிவேலு : கடத்தல், மேற்காவுகையும் கதிர் வீசல் தன்னோடும்
மூன்று முறையினிலே வெப்பம் இடம் பெயரும்
ஊடகத்தின் அடுத்தடுத்த மூலக்கூறுகள் சூட்டை
நின்ற நிலையினிலே கைமாற்றின் கடத்தல் அது
பதார்த்தமேதானசைந்து வெப்பம் இடம்பெயர்ப்பின்
மேற்காவுகை அதுதான் ஊடகத்தின் துணையற்று
வெற்றிடத்தை ஊடறுத்து வெய்யோன் ஒளிக்கற்றை
பற்றியெமைச் சுடுதல்தான் கதிர்வீசல் முறையாலே.

கந்தையா : இவ்வகைகளால் வெப்பம் இடம் பெயரா வகையெதுவோ.

வடிவேலு : வெளிச்சுவரின் உட்புறமும். உட்சுவரின்
வெளிப்புறமும்
வெள்ளிமுலாம் பூசியதும் இடையுற்ற வளியையெல்லாம்
வெளியே அகற்றுவதால் வெற்றிடமாய் ஆகி பின்
தக்கை கம்பளிபோன்ற அரிதிற் கடத்திகளை.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









இ. சிவானந்தன்

கந்தையா : பக்க பலமாய்ச் சுற்றிப் பவுத்திரமாய்த் தகரத்துள்
வைத்தவுடன் கோப்பியேன் சூடாறா திருக்கிறதோ?

வடிவேலு : வெற்றிடத்தால் கடத்தல் மேற்காவுகையும் நடவாது
கதிர்வீசல் முறையாலே கடந்து செல்லு வெப்பமதும்
வெள்ளிமுலாம் பூச்சினிலே தெறித்துத் திரும்பிவிடும்.

கந்தையா : வெந்நீர்க் குடுவைக்கு விளக்கம் தெளிவாச்சு

பின்னேரம் வா போவோம் எம் பிக்கு வரவேற்பாம்.

ஜேம்ஸ் டீவார் - Jame Dewar
கடத்தல் - Conduction
மேற்காவுகை- Convection
கதிர்வீசல் - Radiation






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையைச் சொல்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம் பெயர் தமிழர் பரம்பல்

உலகின் எப்பகுதிகளிலும் அநேகமாக எல்லோராலும் அதிலும் விசேடமாக ஊடகங்களிலும் "டயஸ்போரா" எனும் சொல் பயன்படுத்தப்படுகின்றது. பல்வேறு திசைகளில் பிரிந்து செல்லுதல் அல்லது நாலா பக்கமும் சிதறுதல் எனும் அர்த்தத்தினைக் கொண்ட கிரேக்க மொழிச் சொல்லான "டயஸ்பெரீன்" காலப்போக்கில் மருவி "டயஸ்போரா" எனக் கூறப்படுகின்றது.

பழக்கவழக்கங்கள், கருத்துக்கள், நம்பிக்கைகள் முதலிய பண்பாடுகளையும் அத்துடன் மொழியினையும் பொது அடையாளமாகக் கொண்ட ஒரு சமுதாயம் பல்வேறு திசைகளில் பிரிந்து செல்லுதல் அல்லது சிதறிச் செல்லுதலையே "டயஸ்போரா " என்றழைக்கப்படுகின்றது.

உலகம் பூராவும் ஒரே பொது அடையாளத்துடன், உலகளாவிய ரீதியில் ஐக்கியத்தினை உருவாக்கும் விதத்தில் உலகெங்கணும் பரவி வாழும் புலம்பெயர் தமிழர் சமூகம் அவர்களது தாய்நாட்டினைப் பிறப்பிடமாகக் கொண்டு புலம்பெயர்ந்து வாழும் தமிழர் சமூகத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி, சமூகத்தின் நாகரிகம் மற்றும் பண்பாடுகளை அழியவிடாது பேணிப்பாதுகாத்து அத்துடன் அச்சமூகத்தின் வளர்ச்சிக்கு உதவும் வகையிலும், இவற்றினூடாகத் தமது இலக்கினை அடையும் விதத்திலேயே புலம்பெயர் தமிழர் சமூகம் இயங்குகின்றது.

அந்நாட்களில், எழுச்சிமிக்க வகையில் உலகில் நடைபெற்ற புலம்பெயர்வுகளில் யூதர்கள், இந்தியர்கள் மற்றும் சீனர்களின் புலம்பெயர்வுகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

1834ஆம் ஆண்டில் அடிமைத்தனம் களைந்தெறியப்பட்டதன் பின்னர் அந்நாட்களில், முதன்முதலில் பொருளீட்டும் நோக்கில் வாணிபம் செய்வதற்காக மக்கள் தமது நாடுகளை அல்லது இடங்களை விட்டு அயல் நாடுகளுக்கோ அன்றி கடல்கடந்த நாடுகளுக்கோ செல்லத் தொடங்கினார்கள். அதனைத்தொடர்ந்து காலனித்துவ ஆதிக்க நாட்களில் ஒப்பந்த ரீதியான வேலைகளுக்குச் செல்லவும் தொடங்கினர்.

ஆதிகாலத் தமிழர்களின் நாடுகடந்த குடியேற்றங்கள் யாவும் கண்டறியக் கூடியவைகளாக உள்ளன. இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் கரும்புச்செய்கைகளுக்காக



மொறீசியஸிற்கும் மற்றும் கரீபியன் கடற்பிரதேசத்திலமைந்துள்ள ஜமெய்க்கா, றினிடாட், அத்துடன் சொபாகோவிற்கும், தெற்கு அமெரிக்காவின் குவானர் மற்றும் சரினமிக்கும், தென் ஆபிரிக்காவிலுள்ள ரப்பர் தோட்டங்களுக்கும் மலேசிய சமஸ்டி அமைப்பின் நாடுகளில் ரயில் பாதைகளை அமைப்பதற்கும், சிறீலங்காவிற்கு கோப்பி மற்றும் தேயிலை தோட்டங்களுக்கும், பசுபிக் சமுத்திரத்தின் அவுஸ்திரேலியாவை அண்மித்த நிஷகலெடோனியாவின் நிலக்கரிச் சுரங்கங்களுக்கும் தமிழர்கள் குடியமர்த்தப்பட்டனர்.

உலகின் பல நாடுகளிலும் இந்நடைமுறை சிறிய அளவில் தொடர்ச்சியாக நடைபெற்று இன்று உலகமட்டத்தில் புலம்பெயர்ந்தோர் சமூகம் எனும் பொது அடையாளத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிய அளவிலான மக்கள் தொகையினைக் கொண்டு விளங்குகின்றது.

முதுபெரும் மொழி ஆய்வாளரான வணக்கத்திற்குரிய கெராஸ் அடிகளார் அவர்களின் கூற்றிற்கமைய "தமிழ்" மொழி தற்போதுள்ள மொழிகளிலே மிகவும் தொன்மைவாய்ந்த தொன்றாகக் கணிக்கப்படுகின்றது. பெரும்பாலும் இற்றைக்கு 2500 வருடங்களுக்கு மேலாக அடிப்படைக் கட்டமைப்புகளில் எதுவித மாற்றமுமின்றி பேசப்பட்டுவரும் புராதான மொழிகளிலே தமிழ்மொழி மாத்திரமேஉதாரணமாக விளங்குகின்றது. அதுமட்டுமல்லாது சக்கிவாய்ந்த திராவிட மொழிகளிலே இதுவும் ஒன்றாகும்.

மொழி என்பது ஒரு பாரிய கலாசார மூலப் பொருளாகும். தமிழ் என்பது தனித்தன்மை பொருந்திய பெயராகும் தமிழ் என்பது இனிமைஅல்லது குளிர்ச்சி எனப் பொருள் படும். மொழி மற்றும் கலாசாரம் என்பன ஓர் இனத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

கலாசாரமென்பது ஒரு சமூகத்தின் உறுப்பினர்களைச் சமூகரீதியாக அறிந்து, பகிர்ந்து கொள்ளப்பட்ட தொன்றேயாகும். இது ஒழுக்கங்களின் ஒழுங்குபடுத்தப்பட்ட நடைமுறையேயாகும். அதுமட்டுமல்லாது இது இயல்புநிலையையுடையதாகும். ஏனெனில் இது நடத்தைகளின் தரங்களைத் துல்லியமாக வரையறுக்கின்றது.

தனிப்பிரிவினரால் போற்றிப் பூசிக்கப் படும் மணிமேகலை வழிபாடு, இந்தோனேசியாவில் உள்ள பெரும்பன்னன் கோவில், தாய்லாந்தில் திருவெம்பாவைக் கொண்டாட்டம், கம்பூச்சியாவில் அமைந்துள்ள காரைக் காலம்மன் கோவில் அத்துடன் மெக்சிக் கோவில் கைக்கொள்ளப்படும் சிவலிங்க வழிபாடு என்பன உலகெங்கிலும் பரந்து கிடக்கும் தமிழ்க்குடியேற்றங்களின் தொன்மைக்குச் சான்றுபகர்வனவாக மளிர்கின்றன.

யாழ்ப்பாணத் தமிழர்கள் தமக்கெனப் ஓர் பழமைவாய்ந்த மொழிவடிவத்தினைக் கொண்டுள்ளனர். இதுகுறித்து, 2001ஆம் ஆண்டு சித்திரை மாதத்தில் மொறீசியசில் நடைபெற்ற சர்வதேச முருகன் மகாநாட்டு நினைவுமலர் வெளியீட்டில் பற்றிக்கரிஸ்ரன் எனும் மூதறிஞர் தெரிவித்துள்ளார்.



தமிழினத்தின் அடையாளத்தையும் மற்றும் மூதாதையரின் பாரம்பரியங்களையும் இன்னமும் பேணிப் பாதுகாக்கையில் பொருளாதாரத்திலும் செல்வச் செழுமையினை அடைவதற்கும் பல சந்ததிகளாக ஒவ்வொரு புலம்பெயர் தமிழர் சமூகமும் அயராது போராடி வருகின்றது.

தற்பொழுது உலகில் புலம்பெயர் தமிழரின் எண்ணிக்கை 70மில்லியன் அளவில் உள்ளது. இவர்கள் யாவரும் 50ற்கும் மேற்பட்ட நாடுகளில் பரவிவாழ்கின்றனர். ஏதிலிகளாகவும் புகலிடம் தேடுபவர்களாகவும் புலம்பெயர் தமிழர் சமூகம் அன்றாடம் வளர்ந்து கொண்டே செல்கின்றது.

புலம்பெயர் தமிழர் சமூகம் தத்தமது தாய் நாட்டிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டிருப்பினும் தமது பாரம்பரிய கலாசார மூலக் கூறுகளை எதிர்காலச் சந்ததியினருக்காக அழியவிடாது பேணிப்பாதுகாத்து அதன் வளர்ச்சிக்கு உதவுகின்றனர்.

இவற்றிற்கெல்லாம் அப்பால் கடுமையான போராட்டங்கள் அதன் விளைவாக தமிழர்கள் அனுபவித்த துன்பங்கள் இழப்புக்கள் போன்றன கடந்த காலங்களைப் போலல்லாது புலம்பெயர் தமிழர் சமூகத்தினரிடையில் என்றுமில்லாதவகையில் பாரிய உணர்வலைகளைத் தூண்டிவிட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமத்துவம் மற்றும் சுதந்திரத்துடனும் தமது பிள்ளைகள் அல்லது அவர்களது பிள்ளைகளின் பிள்ளைகள் என வருங்காலச் சந்ததியினர் தலைநிமிர்ந்து வாழலாம் என்ற உயரிய நோக்கத்துடன் செயற்படுகின்றனர்.


அவர்களது மொழிப்பற்று மற்றும் கலா சாரத்தை பேணுவதற்கான பற்றார்வம் என்பவற்றின் துணையுடன் உலகின் கண் எங்கணும் பரந்துள்ள புலம்பெயர் தமிழர்களிடையே ஓர் பிணைப்பினை ஏற்படுத்தி ஐக்கியத்துடன் துரிதமாக வளர்ச்சியடைந்துவரும் ஒரு சர்வதேச சக்தியாக அங்கீகரிக்கப்பட்ட நிலையில் இன்று சமூகம் உள்ளது.

தற்போது பிரித்தானியா, அமெரிக்கா, கனடா, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள் ஒவ்வொன்றிலும் 300,000 பேருக்கு அதிகமாகவும் இன்னும் சில அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் தமிழர் பெருந்தொகையினராகவும் புலம்பெயர்ந்து குடியேறியுள்ளனர்.

உலகின்கண் எங்கணும் குடியேறி வாழ்ந்து வரும் எம் தமிழ் மக்களின் விபரங்கள் தொடர்ச்சியாக எமது அர்ச்சுனா மாதாந்த இதழில் வெளிவரும். வாசியுங்கள்.



சிறு தகவல்



மனிதனின் தலையில் இடப் பக்க மூளையில் பேசும் ஆற்றல் நரம்பு மண்டலம் அமைந்துள்ளது. இதில் பாதிப்பு ஏற்பட்டால் உடலில் வலது பக்கத்தை வாதம் (Paralysis) தாக்கும்.

# யானை

யானைக்கு வியர்வைச் சுரப்பிகள் கிடையாது. உடல் வெப்பத்தைக் குறைப்பதற்காக அது தனது காதுகளால் விசிறிக் கொள்கிறது.

அதிக எடையுள்ள நிலத்தில் வாழும் பாலூட்டி ஆபிரிக்க யானைதான்.

யானை மணிக்கு 40கிலோ மீற்றர் வேகத்தில் ஓடக் கூடியது.

யானையின் துதிக்கையில் எலும்புகள் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கறுப்புத் தந்தமுள்ள யானைகள் ஆபிரிக்காவில் உள்ளது

யானையின் துதிக்கை அதன் வாழ்நாள் முழுவதும் வளர்ந்து கொண்டே இருக்கும்.

யானை 3மைல் தொலைவில் தண்ணீர் இருப்பினும் அதனைக் கண்டு கொள்ளும் சக்தி மிக்கது.

யானையின் கர்ப்ப காலம் 22மாதங்கள்ளாகும்

யானை தனது துதுக்கைக்குள் ஒன்றரைக்கலன் வரையிலான நீரை உறுஞ்சி வைத்துக்கொள்ளும்.



# மழை

செ.மகேந்திரன்

மழை பொழியுது
மழை பொழியுது
மகிழ்ந்து ஆடுங்கள்
விளை நிலங்களில்
பயிர் செழிக்குது
வியந்து பாடுங்கள்

வெள்ளம் பாயுது
வெள்ளம் பாயுது
வேகம் விரையட்டும்
உள்ளம் குளிரும்
உவகை சோ
உலகம் மகிழட்டும்

மக்கள் உயிர்கள்
மரங்கள் வளர
மழையே பொழியட்டும்
அக்கம் பக்கம்
அனைத்தும் நனைய
அழகாய்ப் பெய்யட்டும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலியான மருத்துவர்


ஒரு நகரத்தில், ஒரு செருப்பு தைப்பவன் வசித்து வந்தான். அவன் மிகவும் ஏழையாக இருந்தான். அவனுக்கு வாழ்க்கை நடத்த சரியான வருமானம் கிடைக்கவில்லை. அட கடவுளே, நான் எவ்வளவு கடினமாக உழைக்கிறேன். ஆனால், எனக்கு போதிய வருமானம் கிடைக்வில்லையே. கடவுளே, எனக்கும் உதவி செய்வாயாக, என்று தினமும் கடவுளை வழிபட்டு வந்தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செருப்பு தைப்பவன் ஒரு நாள், ஒரு திட்டம் தீட்டினான். நான், வேறு ஒரு நகரத்திற்கு சென்று ஒரு புதிய தொழிலை தொடங்கப் போகிறேன் என்று நினைத்தான். அடுத்த நாளே,அவனுடைய பொருட்களை எடுத்துக் கொண்டு வேறு நகரத்தை சென்று அடைந்தான். புதிய நகரத்தில், அவனை யாருக்கும் தெரியாததால், மருந்துகள் பற்றி எந்த படிப்பு அறிவும் இல்லாமலே, மருத்துவராக பணிபுரிய ஆரம்பித்தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய நகரத்தில், மருத்துவராக பணியாற்றியவன், பணம் சேர்ப்பதற்காக அனைத்து குறுக்கு வழிகளிலும், ஈடுபட்டான். சர்க்கரையிலேயே ஒரு டானிக் செய்துத அதனை நல்ல மருந்து என்று கூறி அப்பாவி மக்களை ஏமாற்றி வந்தான். அதிகமானவர்கள் அவனிடம் ஏமாறவே அவன் செல்வாக்குடன், பணக்காரனாகவும் ஆகி விட்டான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள்த இந்த போலி மருத்துவனைப் பற்றி அறிந்து கொண்ட ராஜா, அவனது மருந்துகளை நானே பரிசோதனை செய்கிறேன் என்று கூறி, அவனை பார்க்க வந்தார், அப்போது உடல் நலம் இல்லாமல் இருந்த போலி மருத்துவருக்கு, ராஜா ஒரு குவளை குடிதண்ணீரை கொடுத்தார், ராஜா ஏதோ சதி செய்கிறார் என்று பயந்து, தான் பணம் பறிப்பதற்காகவே போலி மருத்துவராக நடித்து வந்தேன், என்று ஒப்புக் கொண்டான். நான் அதிகமானவர்களை ஏமாற்றி விட்டேன். தற்போது பாடம் கற்றுக் கொண்டேன் என்று ராஜாவிடம் கூறினான்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அரண்மனையின் கூடத்தில் அனைவரையும் ராஜா அழைத்தார். அனைவரின் முன்னிலையில் தன்னுடைய குற்றத்தை ஒப்புக் கொள்ளுமாறு செருப்பு தைப்பவனிடம் கூறினார். மக்கள் அனைவரும் அதிர்ச்சியும் கோபமும் அடைந்தனர். நீங்கள் எப்படி இவ்வளவு காலம் அவனை நம்பி இருந்தீர்கள் என்று ராஜா, மக்களை கேட்டார்.

நீதி : **கண்ணை மூடிக்கொண்டு யாரையும் நம்பக் கூடாது.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கீழே உள்ள ஒவ்வொரு
உருக்களை தனித்தனியாக
வெட்டி, முறையாக தாள்
ஒன்றில் ஒட்டி சேவல் ஒன்றை
முழுமையாக உருவாக்குங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிகவும் சோகம்தரும் நதி



# மஞ்சள் நதி

வட சீனாவின் பேராற்றல் படைத்த மஞ்சள் நதியின் பாய்ச்சல் வெளிகளினிடையே ஆங்காங்கே சிறு விவசாயக் குடும்பங்கள் குடியேறி வாழ்ந்து வருகின்ற சிறு சிறு குக்கிராமங்கள் இருந்தன.

இந்நதி வட சீனாவின் ஊடாக வளைந்து வளைந்து மஞ்சள் கடலுக்குச் செல்கின்றது. நதியின் நீரில் அடித்துச் செல்லப்படும் மஞ்சள் நிறமான களிமண்ணின் நிறத்திலிருந்தே மஞ்சள் நதி எனும் பெயர் அமைந்தது.

அங்கு வாழ்ந்த சீனர்களுக்கு வாழ்க்கை சற்றுக் கடினமாகவே இருந்தது. எனினும் அவர்கள் இது குறித்து சற்றேனும் கவலை கொள்ளாது ஒவ்வொருநாளும் நதியின் கீழ்ப் பக்கமாக உள்ள வயல்களில் கடுமையாக வேலை செய்து தமது குடும்பத்தினர்க்கு உணவளிக்கப் போதுமான வகையில் உற்பத்திகளைச் செய்தனர்.

அவர்களுக்குச் சொந்தமாகக் காணிகள், நிலபுலன்கள் இருந்தன. ஆனால் அவர்கள் ஏழைகள் தமது நிலங்களில் பயிர்களை வளர்த்தும் மிருகங்களை வளர்த்தும் தமது ஜீவாதாரத்தைப் பேணிவந்தனர்.

இவ்விவசாயிகள் கோதுமை,அரிசி மற்றும் உருளைக் கிழங்கு என்பவற்றைப் பயிரிட்டு வளர்த்தனர்.

பல நூற்றாண்டுகளுக்கு மேலாக மஞ்சள் நதி பெருக்கெடுத்து சீனாவின் பரந்த பெரிய வெளிகளிலுள்ள சமதள நிலங்களை 1500 தடவைகளுக்கு மேல் மூழ்கடித்தது. நதி அவ்வளவு பல உயிர்களைப் பலியெடுத்தது மட்டுமல்லாது அத்துடன் மிகப்பெரிய துன்பங்களையும் ஏற்படுத்தியது. இந்நதியினை சீனாவின் சோகம் என அழைப்பர்.

அன்று 1887ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் தொடர்ச்சியாக மழை பெய்தது. பெய்யும் காலமது. ஆற்று நீர் உயரத் தொடங்கியது. ஆற்றின் கரை வரம்புகளை ஆற்று வெள்ளம் திடீரென உடைத்துத் திறந்து விடுமோ வென மக்கள் பயந்தனர்.

வெள்ளப் பெருக்கிற்கான அச்சுறுத்தல் இருந்தும் கூட ஒருவரும் அங்கிருந்து வெளியேற நினைக்கவில்லை. அதுவே அவர்களுடைய வீடாகவும் அத்துடன் அவர்களது குடும்பங்களின் நூற்று வருடங்களுக்கும் மேலான வசிப்பிடமாகவும் விளங்குகிறது. அதுமட்டுமன்றி அப்போது அறுவடை நேரமாக இருந்தது. அவர்கள் விரைவில் தமது விளைச்சலை வீட்டிற்குள் கொண்டுவராவிடில் அவர்கள் பட்டினி கிடக்க நேரிடும்.

மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந் தது. ஆற்று மட்டமும் மென்மேலும் உயர்ந்து கொண்டேயிருந்தது. சில இடங்களில் ஏற்கனவே ஆற்றின் நீர்மட்டம் 5மீற்றர் (15அடி) உயரத்தைத் தாண்டியிருந்தது. இது ஆற்றின் கரைகளின் கீழேயுள்ள சமதள நிலையங்களை விட உயரமானது.

சில விவசாயிகள் தமது அறுவடையினை வீடுகளுக்குக் கொண்டுவந்து சேர்ப்பதிலும் ஏனையோர் வெள்ளம் பெருகித் தமது நிலங்களுக்கு வருவதைத் தடுக்கும் முகமாக மண் அணைக் கட்டுகளைக் கட்டுவதிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும்முரமாக ஈடுபட்டனர் ஆனால் அவர்களது முயற்சி கள் சிறிதும் பயனளிக்கவில்லை.


செங்கூ நகரத்திற்குக் கிட்டவாகவுள்ள ஓர் செங் குத்தான வளைவுள்ள இடத்தில் வேகமாகப் பாயும் ஆற்று வெள்ளம் அணையின் மேலாகப் பாயத்தொடங்கியது. அதன் வேகத்தின் நிமித்தம் அரைமைல் இடைவெளியான அணைக்கட் டினை அரித்து அதனை இல்லாமலே அழித்து விட்டது.

ப்ரந்த வெளியெங்கும் ஆற்றுவெள்ளம் புகுந்து வயல்களில் நின்ற விவசாயிகளை அள் ளிச் சுருட்டி வாரிக் கொண்டு சென்றது. விரைந்து பாயும் வெள்ளத்தின் இரைச்சல் அவர்களின் அவலக்குரல்களை விழுங்கிவிட்டது. வலுமிக்க நீரோட்டம் ஆற்றிற்கு அப்பாலுள்ள கிராமங் களை அடைந்ததும். மக்கள் அலறியடித்துக் கொண்டு பாதுகாப்பிற்காக அவர்களது வீட்டுக் கூரைகளின் மேல் ஏறினார்கள்.

சிலர் வெள்ளப் பெருக்கினைத் துணிச்சலுடன் வள்ளங்களிலும் கட்டு மரங்களிலும் ஏறி எதிர் கொண்டவண்ணம் மக்களை மீட்பதிலும் அல் லது கொந்தளிக்கும் வெள்ளத்தினிடையில் செல்ல வழியின்றி ஓரிடத்தில் தவிக்கின்ற மக்க ளுக்கு உணவினை எறிவதிலும் ஈடுபட்டனர்.

வெள்ளம் 11 நகரங்களையும் மற்றும் 1500 கிராமங்களையும் மூழ்கடித்தது. அத்துடன் 900000 மக்களையும் பலி எடுத்தது. ஆயிரக் கணக்கானோர் பட்டினியாலும் நோயினாலும் மடிந்தனர்.

மண் அணைகளைக் கட்டி ஆற்றினை மீண் டும் கட்டுப்பாடிற்குள் கொண்டுவருவதற்கு 18மாதங்கள் எடுத்தது வெள்ளப் பெருக்கின் ஆபத் துக்களைத் தவிர்க்கும் விதத்தில் இந்நதியின் பாய்ச்சல் திசையில் உள்ள வளைவுகளையெல் லாம் சீராக்கி பாரிய அணைக்கட்டு கட்டப்பட்டு விட்டது. ஆனால் ஆற்றினை ஒருபோதும் பூரண மான கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரமுடியாது. சீனாவின் சோகம் நிச்சயமாக இன்னும் பல உயிர்களைக் காவு கொள்ளவே செய்யும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடுகதைகள்

I. வெள்ளை றோட்டில் கறுப்பு கார் ஓடுது. அது என்ன?

2. ஒரு குப்பிக்குள் இரண்டு தைலம் அது என்ன?

3. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல் அது என்ன?

4. தட்டினால் சீறும் பாம்பு அது என்ன? வெள்ளைக்காரன் கறுப்பு தொப்பி போட்டிருக்கிறான் யார் அவன்?

5. அண்ணன் தம்பி 2பேர் அவர்களைச் சுற்றிப் I2பேர் அது என்ன?

6. தலையைச் சீவினால் தாளிலே மேய்வான்?

7. ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம் அது என்ன?

8. மூடித்திறக்கும் சத்தம் கேட்காது அது என்ன?

9. எங்கட தம்பி சிவப்புத் தம்பி தின்பதெல்லாம் பேப்பர் திறந்த வாய் மூடமாட்டான் யார் அவன்?

I0. கிட்ட இருக்கிற பட்டணத்தை எட்டிப்பார்க்க முடியாது எந்தப்பட்டணம்?

விடைகள் 35 ஆம் பக்கத்தில்

## அர்ச்சுனாவின் புதிய அங்கத்தவர்



ஜெயபாலன் துவாரகா
தரம் : 5
யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

## பொன் மொழிகள்




- நல்லதையே நினை! நல்லதையே செய்! நன்மை அடைவாய்!
- நல்லவர் நட்பு உனக்கு நல் வழிகாட்டும்!
- நல்லவன் போல் நடிக்காதே! நல்லவனாக நட!
- நல்லவனுக்கு அழகு, நம்பியவனைக் கை விடாமை!
- நல்லன நீ செய்யின், நல்லது உனைத் தேடிவரும்!
- நல்லவன் எனப் பெயர் எடுப்பது கஸ்டம். தீயவன் என்னும் பெயரை நொடிப் பொழுதில் கேட்டுவிடலாம்!
- நல்லவன் விரும்புவது நல்லதையே! நீயும் அதைச்செய்!
- நல்லவன் போல் நடப்பவனை நம்பிவிடாதே!


ஜெ.துவாரகா.
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பறவை ஒன்றை ஆக்குங்கள்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான பிள்ளைகளே

உங்கள் ஆக்கங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். தரமானவை அனைத்தையும் அர்ச்சுனா தனது பக்கங்களில் சேர்த்து கொள்ளுவான்.

அர்ச்சுனா சிறுவர் வட்டத்தில் சேர்ந்து கொள்ளுங்கள். புதிய படிவத்தை பூர்த்தி செய்து உங்கள் அழகிய நிழற்படத்துடன் எமக்கு அனுப்பி வையுங்கள்

**தொடர்புகளுக்கு :**

**ஆசிரியர்**
**அர்ச்சுனா, சிறுவர் வட்டம்**
**361 கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**



# அர்ச்சுனா
## சிறுவர் வட்டம்

முழுப்பெயர் : ..............................................

..............................................

வகுப்பு : ..............................................

பிறந்த திகதி : ..............................................

பாடசாலையின் பெயர் : ..............................................

..............................................

வீட்டு முகவரி : ..............................................

..............................................

.............................. மாணவர் கையொப்பம்

.............................. அதிபர் கையொப்பம்





# அர்ச்சுனா
## சிறுவர் வட்டம்



15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் அர்ச்சுனா சிறுவர் வட்டத்தில் உறுப்பினர்களாகச் சேரலாம்.

உறுப்பினர்களாகச் சேர விரும்புவோர் அர்ச்சுனாவில் வெளியாகும் 3 கூப்பன்களை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

உறுப்பினர்களாகச் சேர்ந்த மாணவர்கள் எழுதும் கதை கவிதை கட்டுரைகள் ஏனையவை அர்ச்சுனாவில் வெளியாகும்.

மாணவர்கள் தமது ஆக்கங்களைத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டும் எழுத வேண்டும். மாணவர் தானாகவே எழுதினார் என்று வகுப்பாசிரியர் அல்லது அதிபர் உறுதியுரை வழங்க வேண்டும்.

அங்கத்தவர் உறுப்புரிமை அட்டை அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளல் பாரி

எழில் மிகுந்த பொழில் சூழ்ந்த பறம்பு மலை அந்த மலை சூழ்ந்து பல ஊர்கள் வளம் கொழிக்கும் பறம்பு நாடு. அதனை ஆட்சி செய்தவன் பாரியெனும் நல்லுள்ளம் கொண்ட மாமன்னன். வள்ளல் பாரி என்று புலவோரும் கற்றோரும் மட்டுமன்றி பறம்பு மலை கடந்து மக்களும் போற்றும் வண்ணம் அவன் புகழ் பரந்து பேசப்பட்டது.

புலவோர்க்கும் இரப்போர்க்கும் பொன்னும் பொருளும் வாரி வழங்கும் பாரி மன்னன் மாரிக்கு ஒப்பானவன். கைமாறு கருதாது ஊர் செழிக்கக் கொட்டும் மழை போன்றவன் பாரி.

ஒரு நாள் பாரி மன்னன் தனது எழில் நாட்டின் வளம் காணத் தேரேறிப் புறப்பட்டான். தேர் அலங்கரிக்கப் பட்டிருந்தது. அவருடன் சேர்ந்து செல்லப் பலரும் ஆயத் தமாகினர். அதனைக் கவனித்த மன்னன் பாரி "வீரர்களே நீங்கள் எவரும் என்னுடன் வரவேண்டாம். நீங்கள் வந் தால் பெரிய ஆரவாரம் எழும். நான் காணவிரும்பும் இனிய அமைதியான சூழல் கெட்டுவிடுமே" என்றார். அதனைக் கேட்ட வீரர்கள் அரசனின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு அவர்க ளுக்குரிய கடமைகளைச் செய்ய ஏகினர்.

தேர் புறப்பட்டது. வற்றாத செல்வம் மிகுந்த பறம்பு நாட்டின் அழகை ரசித்தபடியே தேரில் பாரி மன்னன் பயணித்தான். தேரிலிருந்து எழுந்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியோசை அழகொளிர வீழ்ந்த அருவியின் இசையைக் கெடுத்தது. அதனால் தேரிலிருந்த மணிகளைத் தேரோட்டி அகற்றினான்.

மான் குட்டிகள் துள்ளிப் பாய்ந்தோடும் அழகில் பாரி மன்னன் மகிழ்ந்தான். மயில்கள் தோகை விரித்து ஆடின. வண்டுகளும் தும்பிகளும் தேனீக்களும் இசையெழுப்பின. நிழல் தரும் விருட்சங்களில் மோதி நாதம் எழுப்பும் காற்றின் அசைவில் மன்னன் இன்புற்றான்.

தேர் மெல்ல மெல்ல அசைந்தபடி நகர்ந்தது. சிறிது தூரத்தில் ஒரு முல்லைக் கொடி கொழுகொம்பற்று காற்றில் அசைந்து ஆடியது. அந்த அவலக் காட்சியைப் பார்த்த பாரி மன்னன் உள்ளம் மிக நொந்தான். கொழுகொம்பற்று முல்லைக் கொடி வாட்டம் மிகுந்து அசைவதாகத் தோன்றியது. தேரை நிறுத்தும்படி கூறிய பாரி மன்னன் தேரிலிருந்து பாய்ந்து இறங்கினான். முல்லைக் கொடி அருகே சென்றான்.


கொழு கொம்பற்ற முல்லைக் கொடி கொழு கொம்பைத் தேடி இரங்குவதாக எண்ணிய மன்னன் தேரோட்டியைக் கூவி அழைத்தான் "தேரை இங்கே இழுத்து வா, முல்லைக் கொடியின் அருகே அதை நிறுத்து" எனப் பணித்தார்.

முல்லைக் கொடியின் அருகே தேர் நிறுத்தப்பட்டது. "குதிரைகளை அவிழ்த்துவிடு அவை நமது அரண்மனைக்குச் சென்று சேரட்டும்" மன்னரின் கட்டளைகள் நிறைவேற்றப்பட்டன. தேர் மீது முல்லைக்கொடி தொட்டுயர அவற்றைப் படர விட்ட அழகை மீண்டும் சில பொழுது பாரிமன்னன் பார்த்து இரசித்தான்.

"தேரோட்டி நாம் நடந்தே அரண்மனைக்குச் செல்வோம் வா" என்று கூறியவாறே இருவரும் நடந்து தலைநகரத்தை நெருங்கினார்கள். நடந்தவற்றை அறிந்த மக்கள் மகிழ்ச்சி பொங்க "வள்ளல் பாரி வாழ்க" என்று வாழ்த்தினார்கள். பாரியின் மகிழ்வு எல்லை கடந்தது. அரண்மனையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கியது.

முல்லைக்கு தேரீந்தான் பாரி

# பச்சைக் கிளி



பச்சைக் கிளிதான் பறந்து வந்து
பாட்டுப் பாடுது

இச்சைக் கினிய கதைகள் கூறி
இதயம் கவருது

அச்ச மின்றித் தோளில் அமர்ந்து
மழலை கூறுது

மிச்ச மின்றிக் கோவைப் பழங்கள்
தின்று தீர்க்கிது

உச்சிக் கொப்பில் பறந்தே ஏறிப்
பாடிக் கூடுது.

■ ஆடலிறை

**விடுகதைகள்**

1. கண்
2. முட்டை
3. கிளி
4. தீக்குச்சி
5. மணிக்கூடு
6. பென்சில்
7. உள்ளங்கை.
8. கண் இமை
9. தபால் பெட்டி
10. முதுகு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பசிக்கும்போது சாப்பிடு

பணக்காரர் ஒருவர் ஓர் இரவு விருந்துக் காகப் பலரைத் தமது வீட்டுக்கு அழைத்தி ருந்தார். அங்கே வகை வையான சுவை யான உணவுப் பண்டங்கள் நீண்ட மேசை யில் பாத்திரங்களிலிட்டு பரவி வைக்கப் பட்டிருந்தன.

நேரமோ போய்க் கொண்டிருந்தது.

ஆனால் விருந்துக்கு அழைத்த பணக் காரரோ எவரையும் விருந்து மேசைக்கு அழைத்துச் செல்லாமல் யாரோ ஒருவ ரின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந் தார். அந்த விசேட விருந்தினரோ வரத் தாமதமாகியதால் அங்கே வந்திருந்த விருந்தினருக்குப் பசி தாங்க முடிய வில்லை அவர்களில் பலரும் பணக் காரரைக் கூட்டிச் செல்லாமல் எப்படி விருந்து மேசைக்குச் செல்வதென்று புரியாமல் தடுமாறினார்.

அப்பொழுது ஒருவர் எவருடைய அழைப்பையும் எதிர்பார்க்காமல் விருந்து மேசையில் உட்கார்ந்து உணவைத் தாமா கவே எடுத்து உண்ணத் தொடங்கினார். இதனை அவதானித்த பணக்காரருக்குக் கடுங் கோபம் வந்தது. அவர் கோபத் தோடு உறுமினார்.



பன்றிக்கும் மனிதனுக்கும் வேறுபாடு என்ன? என்று கேட்டார் சாப்பிட்டுக் கொண்டிருந்த விருந்தினரோ மிகவும் அமைதியாக உணவைச் சுவைத்தபடி "மனிதன் பசிக்கும் போது சாப்பிடுவான்" பன்றி கிடைக்கும் போதுதான் சாப்பிடும் என்று பதில் கூறினார்.

பணக்காரர் மௌனமானார்.



**நீதிமன்றத்தில் சாட்சி :** நான் சொல்வதெல்லாம் உண்மையே தவிர பொய்யொன்றுமில்லை

**சத்தியப் பிரமாணம் செய்தபின் :** என்னையா கோட்டுக்கு வந்த உடனேயே பொய்யைத்தானே சொல்லச் சொல்லுறீங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வார்த்தை விளையாட்டு

மதுரை வீரன் என்ற சொல்லிலுள்ள எழுத்துக்களுக்குத் தரப்பட்டுள்ள இலக்கங்களை அவதானி யுங்கள். இலக்கங்கள் குறிக்கும் எழுத்துக்களை இணைத்து விளையாட் டில் மகிழ்ச்சியுடன் ஈடுபடுங்கள்.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| ம | து | ரை | வீ | ர | ன் |

பாவித்தால் மனிதனை

| | |
|---|---|
| மயக்கும் | – 12 |
| காட்டு மிருகம் | – 13 |
| ஐவருள் ஒருவன் | – 416 |
| இவர் பெரியவர் | – 23 |
| இது ஒரு மரம் | – 43 |
| பலசாலி | – 456 |
| இனிமையானவன் | – 1256 |



இராமவதாரம் என்ற சொல்லிலுள்ள எழுத்துக்களுக்குத் தரப்பட் டுள்ள இலக்கங்களை அவதா னியுங்கள். இலக்கங்கள் குறிக்கும் எழுத்துக்களை இணைத்து விளையாட்டில் மகிழ்ச்சியுடன் ஈடுபடுங்கள்.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| இ | ரா | மா | வ | தா | ர | ம் |

| | |
|---|---|
| அன்னையின் கொடை | – 35467 |
| பெரிய மரம் | – 35467 |
| மனைவி | – 567 |
| அன்னை | – 35 |
| மரம் | – 5467 |
| பறவை | – 52 |
| நடிகையின் பெயர் | – 25 |



விடைகள் 43 ஆம் பக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேய்க் கதை



ஒரு நாள் ரியன் பூ எனும் கூலித் தொழிலாளி, ஒரு சுமை மூடையை அருகிலுள்ள கிராமத்தில் ஒப்படைத்து விட்டு, தனது வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தான். இருண்டுவிட்டது.

பாதை மாறி ஒரு சவக்காலைக்குள் வந்துவிட்ட பின் அங்கு இருட்டில் ஒரு மண்டை ஓட்டுடன் அவன் கால் தடுக்கி விட்டது.

என்ரை முகத்தை நீ சிதைத்தால், வீண் பிரச்சினைதான் வரும் என்றது. அந்த மண்டைஓடு. ரியன் நான் போற வழியிலை உன்னை யார் இருக்கச் சொன்னது? என்று விறைப்பாகக் கேட் டான்.

நானாக வரவில்லை யாரோ தூக்கி இங்கை போட்டுவிட்டாங்கள் என்றது மண்டை ஓடு.

அப்போ ஏன் அவனை நீ ஒன்றும் செய்யவில்லை? என்று கேட்டான் ரியன்.

அவனுக்கு நல்ல காலம் இருந்திருக் குது. அவனை நான் ஒன்றும் செய்ய வில்லை என்றது மண்டை ஓடு.

ரியன் பயங்கரமாகச் சிரித்தான். அப்போ நீ நினைத்துவிட்டாய் எனக்குத் துணை எவருமில்லையென்று. என்ன?... துணிச்சலானவர்களைப் பார்த் துப் பயந்து கொண்டு பலவீனமானவர் களை வெருட்டுகிறாய்... என்ன? உனக்கு வெக்கமில்லையா? என அதட்டினான்.

அம் மண்டையோடு அழுகையுடன் நீ துணிச்சலான ஆள்தான்... உனக்குத் தீங்கிழைக்கும் தைரியம் எனக்கு இல்லை. நான் சும்மா வெறும் வெருட்டல் கள்தான் செய்யிறனான்...மனித சமுதா யத்திலும் பலவான் அப்பாவிகளை வெருட் டுறது நடக்கிறதுதானே.... ஏன் எங்களை ஆவி பேய்களை மட்டும் குற்றம் சாட்டுறீர் கள்?... தயவு செய்து என்னைப் பாதுகாப் பாக அந்தப் புதைகுழிக்குள் தட்டி விடு வீர்களா? உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும் என்று கெஞ்சி மன்றாடியது மண்டை ஓடு.


ரியன்பூ தன்பாட்டில் சென்றான். பின் னால் விசும்பல் ஒலிகேட்டது. வேறொன் றும் நடக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ க. செல்வா
சிறுவர் இல்லம். திருநெல்வேலி

# தென்றல்



பாடும் குயிலும் நீதான்
ஏழு ஸ்வரமும் நீதான்
பாடும் பல்லவியும் நீதான்
பார்க்கும் இடமெல்லாம் உன் சங்கீதம்
கேட்கும் பாட்டெல்லாம் உன் பாட்டுத் தான்
மனதுக்கு இதமான தென்றல் பாட்டு

## நாடுகளின் பழைய பெயர்

| | |
|---|---|
| இந்தோனேசியா | - பத்தேவியா |
| ஈராக் | - மொசப்பத்தேமியா |
| தாய்லாந்து | - சயாம் |
| சிம்பாவே | - தென்றொடீசியா |

# இவர்களைத் தெரியுமா?



சாமுவேல் மோர்ஸ்

தந்திச் சேவையைக் கண்டறிந்தார்




அலெக்சான்டர் கிரகம்பெல்

தொலை பேசியைக் கண்டறிந்தவர்



ஜோன் வாக்கர்

தீக்குச்சியைக் கண்டறிந்தவர்



மாக்மில்லன்

துவிச்சக்கர வண்டியைக் கண்டறிந்தவர்



ஸ்ரீவன்சன்

புகையிரதத்தைக் கண்டறிந்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ நிவேதிதா

# புளூமியின் மதிநுட்பம்

ஆகாஷின் செல்லப்பிராணியான புளூமி மற்றைய பூனைகளை விட வித்தியாசமானது. எலிகளைப் பிடித்துத் தின்பதையே வெறுத்தது. தன் செல்லப் பிராணியின் இத்தகைய நற்குணத்தை ஆகாஷும் தன் நண்பர்களுடன் கூறி மகிழ்வான். இதனால் ஆகாஷின் வீட்டில் எலிகளின் அட்டகாசம் அதிகரித்தது. ஆகாஷின் ஆடைகளையும் அவன் விரும்பி உண்ணும் சிற்றுண்டிகளையும் அநியாயமாக்குவது புளூமிக்கு எரிச்சலூட்டியது.



ஒரு நாள் ஒரு எலி ஆகாஷின் ஆடைகளைப் பற்களால் வெட்டிக் கொண்டிருந்ததை கண்ட புளூமி எலியைப் பாய்ந்து பிடித்துக் கொன்றது. மறுநாள், புளூமி வீட்டின் கூரை மேல் நடந்து வருவதையும் காணாது ஒரு எலிக் குஞ்சு கண்ணீர் வடிய அழுது கொண்டிருந்தது. அருகிற் சென்ற புளூமி,



"ஏன் அழுகிறாய்" என அதனிடம் பரிவுடன் வினவியது. எலிக்குஞ்சும் அழுதவாறே "நீ நேற்று என் அம்மாவைக் கொன்று விட்டாய். நானும் என் சகோதரர்களும் அம்மாவை நினைத்து அழுது கொண்டிருக்கிறோம்" என்று கூறிக் கண்களைத் துடைத்தது.

இதைக் கேட்ட புளூமியின் முகத்தில் கவலை படர்ந்தது. அது எலிகள் செய்யும் திருட்டு வேலைகளைக் கூறியது.

அதற்கு எலிக்குஞ்சு "எங்களுக்குத் திருட்டு மூலமாகத்தான் உணவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிடைக்கிறது. எங்களைக் கண்டால் நீ மட்டுமல்ல மனிதர்கள் கூட, பொறி வைத்துக் கொன்று விடுவார்களே" என்றது. புளூமி எலிக்குஞ்சு கூறியதைக் கேட்டு ஆமோதித்து விட்டு "அப்படியாயின் நான் கூறுவதற்கு நீங்கள் ஒத்துழைத்தால் இனிமேல் ஒருவரை ஒருவர் கொன்று, உறவுகளை இழந்து தவிக்க வேண்டி ஏற்படாது" எனக் கூறியது.

எலிக்குஞ்சும் ஆவலுடன் புளூமியின் திட்டத்தினைக் கூறுமாறு கேட்டது. "எனக்கு என் எசமானான ஆகாஷ் தினமும் தரும் பாலிலும் பல்சுவை உண்டிகளிலும் உங்களுக்கும் பங்கிட்டுத் தருகிறேன் நீங்கள் சாப்பிடுங்கள்" எனக் கூறியது.




அப்போதுதான் எலியும் தங்களின் திருட்டுத்தனத்தை எண்ணி வெட்கப்பட்டது. பூனையும் எலிக்குஞ்சின் கவலையைத் தேற்றி இதை உன் சகோதரர்களுக்கும் சென்று கூறு எனக் கூறியதும் தூரத்திலிருந்து அனைத்தையும் செவிமடுத்துக் கொண்டிருந்த எலிக்குஞ்சின் சகோதரர்களும் கவலையை மறந்து கை கொட்டிச் சிரித்தன.

சிறுவர் சிறுமியரே! எம்மிடம் இருப்பவற்றை இல்லாதவர்களுக்கும் பகிர்ந்தளிந்தால் அவர்களைத் தீய செயல்களில் ஈடுபடவிடாமல் தடுக்கலாமல்லவா.

■ உமாபாரதி

# நன்மை சேரட்டும்



அன்பும் நல்ல பண்பும் சேர
அறிவும் வளர்ந்திடும்
இன்பம் சேர்க்கும் நல்ல குலமே
இறைவன் ஆலயம்
கல்வி செல்வம் வீரம் சேரக்
கருணை பெருகிடும்
சொல்லில் வல்ல உண்மைகூட்டும்
சொர்க்கம் வாழ்விட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





2011 ஆம் ஆண்டு ஜீலை 9 ஆம் திகதி ஒரு புதிய நாடு பிறந்தது. ஆபிரிக்கக் கண்டத்தின் ஒரு நாடான சூடான் வடக்கு தெற்கு எனப் பிரிந்து இரண்டு நாடுகளாயின. வடக்கு சூடானில் பெரும்பான்மையினராக முஸ்லிம்கள் வாழ்ந்தனர். தெற்கு சூடானில் பழங்குடி கறுப்பு இன மக்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்தனர். வடக்கு சூடான் ஆட்சியாளர்களின் பாராமுகத்தால் தெற்குசூடான் மக்கள் தமது பிரதேசத்தைத் தனிநாடாகக் கோரி பல வருடங்களாகப் போராட்டங்களை நடத்தி வந்தனர். அதனால் ஏற்பட்ட கலவரங்களாலும். உள்நாட்டுப் போரினாலும் சுமார் 20லட்சம் பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

நிலமைமோசமானதால் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் தலையீட்டினால் சூடானை இரு நாடுகளாக்கும் திட்டம் உருவானது. 2011 ஜனவரியில் வாக்கெடுப்பு நடைபெற்றது. நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது வீதமான தெற்கு சூடான் மக்கள் பிரிவினைக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதனைத் தொடர்ந்து ஒன்றாக இருந்த சூடான் நாடு வடக்கு சூடான், தெற்கு சூடான் என இரு நாடுகளாகி தெற்கு சூடானின் தலைநகரான ஜீபாவில் ஜூலை 9 ஆம் திகதி நள்ளிரவில் கூடிய மக்கள் "நாட்டின் அதிபர் சல்வா கிளிர் மயார்டிட் வாழ்க" என முழங்கினர். போராலும் கலவரங்களாலும் பாதிப்புக்களுக்கு உள்ளான தெற்கு சூடான் எண்ணெய் வளமுடையது மக்களின் தேசப்பற்றின் வலிமையால் நாட்டின் வளங்கள் பேணப்படுவதோடு வேளாண் செழிப்பும் பெருகி நாடு வளர்ச்சிகாண நாம் அனைவரும் ஒன்று கூடி வாழ்த்துவோம்.






# புதியதொரு நாடு
# தெற்கு சூடான்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெற்றிக் களிப்பு



## வார்த்தை விளையாட்டு

### சிறு தகவல்

பத்திரிகைகளில் வெளிவரும் குறுக் கெழுத்துப் போட்டியை உருவாக்கியவர் அமெரிக்கரான ஆர்தர் வைனி என்பவ ராவார். 1913இல் இந்தக் குறுக்கெழுத்துப் போட்டிகள் முதன் முதலில் உருவாக்கப்பட் டன.

### மதுரைவீரன்

1. மது
2. மரை
3. வீமன்
4. துரை
5. வீரை
6. வீரன்
7. மதுரன்

### இராமாவதாரம்

1. மாதா வரம்
2. மா தாவரம்
3. தாரம்
4. மாதா
5. தாவரம்
6. தாரா
7. ராதா



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் கைவண்ணங்கள்



## யாழ் இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநோதமான உயிரினங்கள்.



ஆமை நீண்ட ஆயுளைக் கொண்டது.



ஒட்டகத்தின் பால் கறந்த சில நிமிட நேரத்திலேயே கட்டியாக உறைந்து இறுகிவிடும்.





திமிங்கிலத்திற்கு நீண்ட முதுகெலும்பு உள்ளது.



வெட்டுக்கிளியின் கண்கள் ஐந்து. அதன் கால்களிலேயே கேட்கும் உறுப்பான காதுகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கரப்பான் பூச்சியின் தலையைத் துண்டித்தாலும் குறைந்தது ஒருவார காலம் அது உயிர் வாழும்.



எறும்பு தனது மோப்பசக்தியை இழந்தால் இறந்து விடும்



சிறுத்தை மிகவேமாக ஓடும் வலிமை கொண்ட விலங்கு



முதலையின் மூக்கிலும் பல் உண்டு.



நாய்க்கு நாக்கிலும் வியர்க்கிறது.

தே.கஜார்த்தன்.
தரம் – 10.
யா /பா யோவான் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படம் பார்த்து வர்ணம் தீட்டுங்கள்















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






உறுதி • நவீன வடிவங்கள் • அழகிய நிறங்கள்

லக்சுமி ஒகனைஷேசன்

**Lukshmee Organization**

(வட மாகாண ஏக விநியோகஸ்தர்)

இல. 25, 4ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு : 021 222 7167

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அர்ச்சுனா' இதழ் உதயன் வெளியீட்டகத்தினால் வெளியிடப்படுகிறது. இல. 361 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.